**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.01/2018** D.W. 1

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. ஈஸ்வரன் | Caste: | |
| Father's Name . | | Calling: | |
| Village | :. போடிநாயக்கனூர் | Religion: இந்து | |
| Taluk | : தேனி | Age | . 64 |
| Date | : 12.07.2023 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 12.07.2023

(Accused A2 present. A1 absent. u/s.317 Cr.P.C petition is filed and allowed.)

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை**.

நான் 12 ம் வகுப்பு படித்திருக்கிறேன். எனக்கு தற்போது 64 வயதாகிறது. எனக்கு 25 வயதில் திருமணமானது. என் மனைவி பெயர் விஜயலெட்சுமி இந்த வழக்கின் 1வது எதிரியாவார் அவர்தான் என்னுடைய சட்டப்படியான மனைவி என்பததை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை ஆனால் ஆதார் கார்டு இருக்கிறது ( சாட்சி ஆதார் கார்டை காட்டுகிறார்) ஆதார் கார்டை வைத்து ஒருவரை சட்டப்படியான மனைவி என்று ஒருவரை முடிவு செய்யமுடியாது என்றும் எனவே 1வது எதிரி என்னுடைய மனைவி என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

எனக்கு இரண்டு ஆண்குழந்தைகள் இருக்கிறார்கள். முதல் பையன் பார்த்தீபன் 26 வயதாகிறது எலட்ரீஷியனாக வேலைப்பார்த்துவருகிறார். 2 வது மகனுக்கு 24 வயதாகிறது. அவரும் வேலைப்பார்த்துவருகிறார். எனது சொந்த ஊர் தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் ஆகும். எனக்கு பெண் குழந்தையை தத்தெடுக்க வேண்டிய எந்த அவசியமும் இல்லை என்றும் இந்த வழக்கிற்காக பொய்யாக ஒரு ஆவணத்தை தயார் செய்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு சொந்த வீடு மட்டும்தான் இருக்கிறது வேறு சொத்துக்கள் இல்லை.

இரண்டு ஆண் குழந்தைகளை பராமரிப்பதற்கே அந்த வசதி வாய்ப்பு போதாது என்றும் பெண் குழந்தையை வளர்க்கும் அளவிற்கு வசதி இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. இரண்டும் ஆண் குழந்தை என்பதால் பெண் குழந்தை வேண்டுமென்று ஆசைப்பட்டுதான் தத்தெடுத்தேன். குழந்தையை தத்தெடுத்த சமயத்தில் எனக்கு 58 வயதிருக்கும் என் மனைவிக்கு 56 வயதிருக்கும். அந்த வயதில் எனக்கும் என் மனைவிக்கும் குழந்தை பெற்றுக்கொள்ளும் தகுதியில்லாத நிலையில் இருந்ததால் அந்த பெண் குழந்தையை தத்தெடுத்தேன். விஜயலெட்சுமியின் கணவர் பெயர் கிருஷ்ணமூர்த்தி என்றால் சரிதான் அவர் முதல் கணவர் அவர் இறந்த பிறகுதான் நான் இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டேன்.

முதல் கணவரோடு நான்கு வருடம் குடும்ப நடத்தியதாக என் மனைவி சொல்லிதான் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்த ஆவணத்தின் பெயர் எனக்கு தெரியவில்லை செப்டம்பர்

மாதம் 27 ம் தேதி அந்த ஆவணம் எழுதப்பட்டது. சுகன்யாவை முதல் முறையாக செப்டம்பர் மாதம் வேளாங்கண்ணி கோவிலில் வைத்து பார்த்தேன் குழந்தையோடு தற்கொலை செய்துகொள்ள போனவரை காப்பாற்றி எங்களோடு அழைத்துவந்து அவர் குடும்பத்தாரோடு நல்ல முறையில் ஒப்படைத்தேன்.

அதன் பிறகு 10 நாட்கள் கழித்து குழந்தையோடு என்னை வந்து பார்த்தார். எதற்காக வந்தார் என்றால் அந்த குழந்தையை என்னிடம் ஒப்படைத்துவிட்டு அவர் வேலைக்குப்போவதாகவும் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் சொல்லி அவருக்கு குழந்தை வேண்டாம் என்றும் நீங்களே தத்தெடுத்துகொள்ளுங்கள் என்றும் சொன்னார் அப்போதுதான் பாதுகாப்பிற்காக அந்த பேப்பரில் எழுதி வாங்கிக்கொண்டேன். உடனே நான் அவரது அம்மா, அண்ணி ஆகியோருக்கு தகவல் சொன்னேன் அவர்களும் வந்து நீங்கள் குழந்தையை பார்த்துக்கொள்ளுங்கள் வளர்த்துக்கொள்ளுங்கள் நாங்கள் அவ்வப்போது வந்து பார்த்துக்கொள்கிறோம் என்று சொன்னார்கள்.

சுகன்யாவின் கணவரை நான் பார்த்ததில்லை. அந்த பெண் கணவரை பிரிந்திருந்ததால்தான் குழந்தையை அவராக கொடுத்தார் குழந்தையை கணவன் மனைவி இருவரும் சேர்ந்துதான் தத்துகொடுக்கலாம் என்றும் ஒருவர் மட்டும் தத்துகொடுக்க முடியாது என்று சொன்னால் அவர் கணவரை பிரிந்திருந்தார். குழந்தையின் தகப்பனாரின் உரிமையின்றி அந்த குழந்தையை வாங்கி வைத்துக்கொண்டதே பிள்ளை பிடித்தல் குற்றத்திற்கு ஆளாகும் என்றால் நானாகபோய் வாங்கவில்லை சுகன்யா தான் வீட்டிற்கு வந்து கொடுத்தார். சுகன்யாவே குழந்தையை ஒப்படைத்திருந்தாலும் அந்த குழந்தையை வளர்ப்பதற்கு எனக்கு உரிமையில்லை என்றும் அதை அவரது தாயாரிடமோ அவரது கணவரிடமோ ஒப்படைத்திருக்க வேண்டும் என்று சொன்னால் ஏற்கனவே ஒருமுறை அவரது அம்மாவிடம் ஒப்படைத்தபிறகு மீண்டும் வந்து அவராகத்தான் கொடுத்தார். அவராகவே கொடுத்திருந்தாலும் நான் காவல் நிலையத்தில்தான் ஒப்படைத்திருக்க வேண்டும் என்று சொன்னால் ஏற்கனவே காவல் நிலையத்தில் வைத்துதான் ஒப்படைத்தேன். புளியம்பட்டி அந்தோணியார் கோவில் போலிஸ் ஸ்டேஷனில் வைத்துதான் போலிசார் முன்னிலையில் ஒப்படைத்தேன் அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை.

நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் சட்டப்படியாக ஏற்றுக்கொள்ள கூடிய சட்ட ஆவணம் இல்லை என்றும் வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆவணமே என்னை கைது செய்யப்பட்ட பிறகு தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. வெற்றுத்தாளில் கையெழுத்து வாங்கி பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் உள்ள கைரேகை மற்றும் கையெழுத்து சுகன்யாவுடையது இல்லை என்றால் சரியல்ல. ஆய்விற்கு உட்படுத்தி தெரிந்து கொள்ள சம்மதிக்கிறேன். நான் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தபோது என்னை ஜாமீனில் எடுப்பதற்கே சுகன்யாதான் ஏற்பாடுசெய்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சுகன்யா பாத்ரூம் போவதற்காக குழந்தையை பார்த்துக்கொள்ள சொல்லி கொடுத்துவிட்டு போன குழந்தையை நானும் 1வது எதிரியும் சேர்ந்து கடத்தி சென்றுவிட்டோம் என்றால் சரியல்ல. ஆவணம் சட்டப்படியான ஆவணம் இல்லை என்றும் வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றும் சொன்னால் சரியல்ல. பொய்யான ஆவணத்தை தயார் செய்து சாட்சியம் அளிப்பதே தவறு என்றால் சரியல்ல. பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**